**செய்தி வெளியீடு எண்: 413** **நாள்: 27.06.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, வேளாண்மைத் துறையில் மின்னணு தொழில்நுட்பத்தின் மூலம் விவசாய பெருங்குடிமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, உழவன் கைபேசி செயலி எனும் புதிய விரிவாக்க சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் 5.4.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இச்செயலி, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் மானியத் திட்டங்கள், பயனாளி திட்ட முன்பதிவு, பயிர் காப்பீடு விவரம் அறிதல், விதை இருப்பு விவரம் அறிதல், உரம் இருப்பு அறிதல், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள், விளைபொருட்களின் சந்தை விலை அறிதல், வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரை பெறுதல், வேளாண் விரிவாக்க பணியாளர்கள் வருகை ஆகிய ஒன்பது வகையான சேவைகளைக் கொண்டு துவக்கப்பட்டது. விவசாயிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற வரவேற்பினை அடுத்து, இச்செயலிக்கு மேலும் மூன்று சேவைகளான முக்கிய அணைகளின் நீர்மட்டம் அறிதல், வேளாண் செய்திகள் மற்றும் பயனாளிகளின் கருத்துக்கள் அறிதல் ஆகிய தகவல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவரை, 1,45,000 பயனாளர்கள் இந்த உழவன் செயலியினை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 15,300–க்கும் மேற்பட்ட விவசாயிகள் மானியத் திட்ட பலன்களை அடைவதற்காக பதிவு செய்துள்ளனர்.

ஸ்கோச் நிறுவனத்தினால் இந்த ஆண்டிற்கான 52–வது மாநாடு டெல்லியிலுள்ள தேசிய அரசியலமைப்பு மன்ற கட்டடத்தில் (Constitution Club of India) நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண் துறை **Sustaining the Use of Publicly available information from Agricultural Portal (SUPPORT)- உழவன் கைபேசி செயலி** என்ற தலைப்பில் பங்கு கொண்டு, **"புகழத்தக்க விருது"** (Order of Merit) தமிழ்நாடு வேளாண்மைத் துறை **உருவாக்கிய உழவன் கைபேசி செயலிக்கு <u>அறிவிக்கப்பட்டது.</u>** இறுதிக்கட்டமாக 23.6.2018 அன்று நடைபெற்ற மாநாட்டில், பொது வாக்கெடுப்பு மற்றும் தீவிர கருத்துக் கணிப்பு அடிப்படையில் **வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பம்** என்ற பிரிவின் கீழ் **உழவன் கைபேசி சேவைக்கு "ஸ்கோச் வெள்ளி விருது"** வழங்கி சிறப்பித்தது.

உழவன் கைபேசி செயலிக்கு வழங்கப்பட்ட ஸ்கோச் வெள்ளி விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று (27.6.2018) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்த நிகழ்வின்போது, வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.6.2018**